# நாளாகமத்தின் இரண்டாம் புத்தகம்

## "நாளாகமம்" என்று பெயர் பெற காரணம்

நாளாகமம் என்றால் நாட்களின் வார்த்தைகள் (நிகழ்வுகளும்,கணக்குகளும்)" அல்லது "தேசத்தின் பயணப் பதிவேடுகள்"

இது ஆவிக்குரிய கண்ணோட்டத்தோடு எழுதப்பட்ட இஸ்ரவேலின் வரலாறு

1ம், 2ம் நாளாகமத்தின் புத்தகங்கள் ஆரம்பத்தில் எழுதப்பட்டபோது ஒரே புத்தகமாகவே இருந்தது.

கிரேக்க மொழிபெயர்ப்பான Septuagint இதை இரண்டு புத்தகங்களாளக பிரித்தது.

## ஆக்கியோனும் தகவல்களும்

எஸ்றாவால் எழுதப்பட்டிருப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம்

ஒரு ஆசாரியனுக்குரிய கண்ணோட்டத்தோடு எழுதப்பட்டிருக்கிறது

எஸ்றாவின் புத்தகத்திற்கு ஒத்ததாக இருக்கிறது

நாளாகமத்தின் இறுதி அதிகாரத்தின் வசனங்கள் எஸ்றாவின் முதல் அதிகாரத்தின் வசனங்களுக்கு ஒத்திருக்கிறது.

கிமு 550-430 காலப்பகுதியில் எழுதப்பட்டிருக்ககூடும்

பாபிலோனிய சிறையிருப்பில் இருந்தபோது பேரரசனான கோரேஸ் யூதர்கள் எருசலேமுக்கு திரும்பிச்சென்று அங்கு ஆலயத்தை கட்டிக்கொள்ளலாம் என்று கட்டளை பிறப்பித்த நாட்களில் எழுதப்பட்டிருக்கலாம் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு (2நாளா 36:20-33)

அதிகாரங்கள் 36
வசனங்கள் 822

## இஸ்ரவேல், யூதா என்னும் இரண்டு இராஜ்யங்கள்

சவுல் (40 years)
தாவீது (40 years)
சாலொமோன் (40 years)
வட ராஜ்யம் (210 Years)
தென் ராஜ்யம் (345 Years)

இஸ்ரவேலர் ராஜாக்களின் அளுகையின் கீழிருந்த காலம் 467 ஆண்டுகள்

இஸ்ரவேலர் ராஜாக்களின் அளுகையின் கீழிருந்த காலம் 467 ஆண்டுகள் (கிமு 1053-586)

யூதாவின் சிறையிருப்பின் காலம் எரேமியாவின் தீர்க்கதரிசனத்தின்படியே 70 ஆண்டுகள் (எரே 25:8-11)

கிமு 539ல் பேரரசனான கோரேஸ் பாபிலோனிய பேரரசை வீழ்த்திய பின்பு சிறையிருப்பிலிருந்த யூதர்களை யூதேயாவுக்கு திரும்பிச்செல்ல அனுமதித்தான்.

அதி 19 ராஜாவாகிய சாலொமோனின் 40 ஆண்டு கால ஆட்சியை விபரிக்கிறது.

அதி 10-36 மீதியுள்ள ராஜாக்களின் 345 ஆண்டு கால ஆட்சியை விபரிக்கிறது.

இந்தப் புத்தகத்தின் 70% பகுதிகள் 8 உத்தமாய் நடந்த ராஜாக்களின் சம்பவங்களை சொல்லுகிறது

இந்தப் புத்தகத்தின் 30% பகுதிகள் 12 துன்மார்க்கமாய் நடந்த ராஜாக்களின் சம்பவங்களை சொல்லுகிறது

## யூதாவிற்கு முக்கியத்துவம்

இராஜாக்களின் புத்தகமும், நாளாகமத்தின் புத்தகமும் 10 கோத்திரத்தாரை கொண்ட வடக்கு இராஜ்யமான இஸ்ரவேலை பெரும்பாலும் தவிர்ப்பதற்கான காரணங்கள்.

a. அதன் தவறான வழிபாடு
b.அது எருசலேமிலுள்ள தேவனுடைய ஆலயத்தை ஏற்றுக்கொள்ள மறுத்தல்

**a.**தவறான வழிபாடு

தவறான தெய்வங்களை வழிடுதல், மெய்யான தேவனுக்கு தவறான ஆராதனை செய்தல் ஆகிய இரண்டுமே தவறு (யாத் 20:3-4)

1.என்னையன்றி வேறே தெய்வங்களை நீ நமஸ்கரிக்க வேண்டாம் (யாத் 32:1-5)
2.சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உண்டாக்க வேண்டாம்;

**b.**மாற்று வழிபாட்டுத்தலங்கள்

தாணிலும், பெத்தேலிலும் பொன் கன்றுகுட்டி விக்கிரகங்களோடு மாற்று வழிபாட்டுத்தலங்கள் கட்டப்பட்டன (1இரா 12:26-32)

## இந்தப் புத்தகத்தின் நோக்கம்

கிமு 538 காலப்பகுதியில் யூதர்கள் 70 ஆண்டு கால சிறையிருப்பை முடித்து தங்கள் தேசத்திற்கு திரும்பினார்கள். ஆனால் இப்போது அந்த தேசம் கிமு 1011-971 வரை ஆண்ட தாவீதின் காலத்திய தேசமாகவோ அல்லது கிமு 971-931 வரை ஆண்ட சாலொமோனின் காலத்திய தேசமாகவோ இல்லை (தேசத்தின் வரைபடத்தை பார்க்க).

இப்போது அங்கே யூத ராஜா இல்லை, ஆனால் பெர்சிய ஆளுனர் இருக்கிறார் 5:3,6:6)

(எஸ்றா இப்போது எருசலேம் பாதுக்கப்பட்ட இடமாக இல்லை, ஆகவே நெகேமியா அலங்கங்களை கட்டவேண்டியதாயிற்று (நெகே 1-7)

. இப்போது அங்கே ஆலயம் இல்லை, ஆகவே செருபாபேல் சாலொமோனின் ஆலயத்தின் அழகிற்கு சற்றும் சம்பந்தமில்லாத ஆலயத்தை புதிதாக எழுப்ப வேண்டியிருந்தது (எஸ்றா 3)

இப்போது அந்த பகுதிகள் யூதர்களின் கட்டுப்பாட்டில் இல்லை, ஆகவே அதை பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கவேண்டியிருந்தது (எஸ்றா அதி 4. நெகே அதி 4)

. இப்போது அவர்கள் சியைிருப்பிலிருந்து திரும்பி வந்த ஆசீர்வாதத்தை தவிர சொல்லத்தக்க அளவில் பெரிய ஆசீர்வாதங்கள் உண்டாயிருக்கவில்லை.

இப்போது முன்னிருந்த இராஜ்யத்தின் செல்வங்களில் மிக மிகக் குறைந்த அளவு செல்வமே கைவசம் இருந்தது.

இப்போது தேவனுடைய பிரசன்னம் எருசலேமில் இருக்கவில்லை: அது விலகிப் போயிருந்தது (கிமு 597-591 எஸ்றா அதி 8-11).

தாவீது, சாலொமோன் ஆட்சிக்காலத்தின் நாட்களின் மேன்மையோடு ஒப்பிடுகையில் எதிர்காலம் இருண்டதாக காணப்பட்டது.

2 நாளாகமத்தில் சொல்லப்பட்ட ராஜாக்களின் காலத்திய சம்பவங்கள் சிறையிருப்பிலிருந்து மீண்ட யூதர்களுக்கு தைரியத்தையும், நம்பிக்கையையும் தந்தன.

இந்தப் புத்தகங்களின் பக்கங்கள் யூதாவின் ராஜாக்களில் உத்தமமாயிருந்த எட்டு ராஜாக்களின் காரியங்களை பதிவிட்டிருக்கிறது.

பெர்சியாவின் அரசஉத்தரவினால், அரசின் செலவிலேயே தாயகம் திரும்ப அனுமதிக்கப்பட்டதை முக்கியத்துவப்படுத்துவதற்காக எழுபது ஆண்டுகால சிறையிருப்பின் சம்பவங்கள் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

அவர்களது கடினமான வாழ்க்கைச் சூழ்நிலையின்போது அவர்களது ஆவிக்குரிய பாரம்பரியம் எப்படிப்பட்டது என்பதை இந்தப் புத்தகம் அவர்களுக்கு நினைவூட்டியது.

எல்லாமே இழந்துபோன நிலையில் அவர்கள் பற்றிப் பிடித்கொள்ள அவர்களுக்கு இருந்தது கர்த்தருடைய வாக்குத்தத்தங்களும் அவருடைய வசனமுமே!

## முக்கிய படிப்பினைகள்

1 சரியான தொடர்புகள் Right Connections

சாலொமோன்: 8:16ல் தேவனுக்கான வீட்டை அருமையாக கட்டினான் ஆனால் அவனது சொந்த வீட்டை கட்டுவதில் தவறிழைத்தான்.

யோசபாத்: தனது குமாரனான யோராமிற்கு தவறான இடத்தில் பெண் கொண்டான்.

அவள் ஆகாப், யேசபேலின் குமாரத்தி (21:6): யோராம் இஸ்ரவேல் ராஜாக்களின் வழியிலே நடந்தான் (21:6): எலியாவின் வார்த்தை நிறைவேறியது (21:12-18):ஜனங்கள் அவனுக்காக துக்கிக்கவில்லை (21:19-20 இதை யோசியாவின் மரணத்தோடு ஒப்பிட்டு பார்க்கவும் 35:24-25)

சரியான ஆலோசனைகள் Right Counsel

. ரெகோபெயாம் இளவயதினரின் ஆலோசனைக்கு செவிகொடுத்தான் (10:1-19)

ஆகாபிற்கு பிரியமாக பொய்யான தீர்க்கதரிசனம் சொல்லிய தீர்க்கதரிசிகள், அவனுக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் சொல்லிய மிகாயா (18:2-27)

மிகாயா பிரியமில்லாத தீர்க்கதரிசனத்திற்காக வெறுக்கப்பட்டான் (வச 7)

. பிரியமான தீர்க்கதரிசனம் சொல்ல நிர்ப்பந்திக்கப்பட்டான் (வச12)

. கன்னத்தில் அடிக்கப்பட்டான் (வச12) சிறைவைக்கப்பட்டான் (வச25-26)

சரியான உடன்படிக்கை Right Covenant

. சுத்தீகரித்தலும், அர்பணித்தலும் (34:33)

நியாயப்பிரமாணம் கண்டெடுக்கப்பட்டது (34:15)

. நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்டது (34:15)

. நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிய உடன்படிக்கை செய்யப்பட்டது (34:31-32)

## 2 நாளாகமத்தின் முக்கிய பகுதிகள்

1.சாலொமோனின் ஆட்சி (அதி 1-9)

இந்தப் பகுதியில் சாலொமோன் செய்த ஆயத்தங்களின் தொடர்ச்சியும், ஆலய கட்டுமானத்தின் நிறைவும், ஆலய பிரதிஷ்டையும் அத்துடன் அவனது பல்வேறு நடவடிக்கைகளும் சொல்லப்படுகிறது.

II.யூதாவின் வரலாறும் அதன் வீழ்ச்சியும் (அதி 10-36)

1) பத்துக் கோத்திரத்தரின் கலகமும், ரெகோபெயாமின் ஆட்சியும் (அதி 10-12)

2) அபியாவின் ஆட்சி (அதி 13)

3) ஆசாவின் ஆட்சி (அதி 14-16)

ஆசா தேவனுடைய ஊழியக்காரனாயிருந்து தேசத்து ஜனங்களின் வழிபாட்டிலும், ஒழுக்கத்திலும் மறுமலர்ச்சியை கொண்டுவந்ததால் இந்த காலம் யூதாவின் செழிப்பான காலமாயிருந்தது.

4) யோசபாத்தின் ஆட்சி (அதி 17-20)

யோசபாத் தேவனை சேவிக்கிறதில் உண்மையுள்ளவனாயிருந்தான். ஜனங்கள் நியாயப்பிரமாணத்தை தெரிந்துகொள்ளச் செய்ய பல முயற்சிகளை எடுத்தான்.

5) யோராம் மற்றும் அகாசியாவின் ஆட்சிகள் (அதி 21:1-22.9)

6) யூதாவின் ஒரே ராணியான அத்தாலியாளின் ஆட்சி (அதி 22:10-23:21)

7) யோவாஸின் ஆட்சி (அதி 24).

யோவாஸ் ஏழு வயதில் ஆட்சிக்கு வந்தான். இவனுக்கு இவனுக்கு யோய்தா என்கிற பிரதான ஆசாரியன் அலோசனைக்காரனாக இருந்தான். சரியான ஆராதனையை மீண்டும் கொண்டுவந்தான். ஆனால் யோய்தாவின் மரணத்திற்கு பின்பு விக்கிரக வழிபாட்டுக்குள் வழுவிப்போனான்.

8) அமத்சியா. உசியா. யோதாம். ஆகாஸ் ஆகியோரின் ஆட்சி (அதி 25-28)

9) எசேக்கியாவின் ஆட்சி (அதி 29-32)

வழிபாட்டு ரீதியான மீட்டெடுப்போடு ஆரம்பித்த எசேக்கியாவின் ஆட்சியில் யூதாவின் இழந்துபோன பலமும், புகழும் ஓரளவு மீட்கப்பட்டது.

10) மனாசே மற்றும் ஆமோனின் ஆட்சி (அதி 33).

11) யோசியாவின் ஆட்சி (அதி 34-35).

யோசியா தனது எட்டாவது வயதில் ஆட்சிக்குவந்து பதினெட்டு ஆண்டுகள் ஆட்சிசெய்தபோது யூதாவில் முன்னெப்போதும் இல்லாத வகையில் வழிபாட்டில் மறுமலர்ச்சியை உண்டாக்கினான். ஆலயம் புதுப்பிக்கப்பட்டபோது கண்டெடுக்கப் பட்ட நியாயப்பிரமாண புத்தகம் இந்த மறுமலர்ச்சிக்கு பெரிதும் வழிகோலியது. 12) யூதாவின் இறுதிநாட்கள் (அதி36)

யோவாகாசின் குறுகிய கால ஆட்சிக்கு பின் யோயாக்கீம் ஆட்சியில் அமர்ந்து பதினொரு ஆண்டுகள் ஆட்சிசெய்தான். இந்த காலத்தில் அவன் மாறிமாறி எகிப்திற்கும், பாபிலோனுக்கும் கப்பம் கட்டுகிறவனாக இருந்தான். பாபிலோனுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட முனைந்து அதிலே மரணமடைந்தான். அவனுக்கு பின் யோயாக்கீன் பதவிக்கு வந்து மூன்று மாதங்களே ஆட்சி செய்து பின் பாபிலோனுக்கு சிறைப்பட்டுப்போய் நீண்டகாலம் அங்கேயிருந்தான். யூதாவின் கடைசி ராஜா சிதேக்கியா. நேபுகாத்நேச்சார் எருசலேமை ஏற்கனவே கொள்ளையிட்டு அதன் பொக்கிஷங்களையெல்லாம் கைப்பற்றி பிரபுக்கள் குலமானவர்களில் பெரும்பாலானவர்களை பாபிலோனுக்கு கொண்டுபோயிருந்தான்.

இந்தப் புத்தகத்தில் பாபிலோனியர்களால் கிமு 606 மற்றும் கிமு 597ல் நடத்தப்பட்ட இரண்டு படையெடுப்புக்கள் சொல்லப்பட்டுள்ளதோடு கிமு 586ல் சிதேக்கியாவின் காலத்தில் நடைபெற்ற மூன்றாவது படையெடுப்பில் எருசலேமில் சில ஏழையான ஜனங்கள் தவிர எதுவும் மீதியாயிராதபடி வாரிக்கொண்டு போனான். ஐந்து ஆண்டுகள் கழித்து மீண்டும் 750 பேரை பிடித்துக்கொண்டு போக வந்தார்கள். அப்போது அங்கிருந்தவர்கள் தீர்க்கதரிசியாகிய எரேமியாவையும் கூட்டிக்கொண்டு எகிப்திற்கு தப்பிப்போனார்கள் (எரே 43)

ஆக்கியோன்

***Pastor. Gabriel Thomasraj***